සියලු ම හිමිකම් ඇවිරිණි முழுப் பதிப்புரிமையுடையது All Rights Reserved

வடமேல் மாகாண கல்வித் திணைக்களம்
Provincial Department of Education - NWP

மூன்றாம் தவணைப் பரீட்சை - தரம் 09 - 2023 (2024)
Third Term Test - Grade 09 - 2023 (2024)

# கத்தோலிக்க திருமறை

நேரம்: 2 மணி.

சுட்டெண்:

பகுதி - I

- **எல்லா வினாக்களுக்கும் விடை தருக.**
- **மிகச்சரியான விடையின் கீழ் கோடிடுக.**

02. விண்ணுலக அரசரின் மகனாகிய இயேசு கிறிஸ்துவை திருமணம் செய்துள்ளேன் எனக் கூறிய புனிதர்
    i. தூய மரிய கொறற்றி ii. தூய அக்னஸ்
    iii. தூய சின்னத் திரேசா iv. தூய டொமினிக் சாவியோ

02. ஆண் பிள்ளைகளினதும், புதன் நன்மை பெறும் பிள்ளைகளினதும் பாதுகாவலர்
    i. தூய டொமினிக் சாவியோ ii. தூய அண்ணா அன்னை தெரேசா
    iii. தூய மைக்கல் றொட்றிகோ iv. இயேசு கிறிஸ்து

03. தூய யோசேப்வாஸ் சிறை அடிகள் கைதியாக கண்டியிலிருந்த போது கண்டியை ஆட்சி செய்த அரசன் யார்?
    i. ஸ்ரீ விக்ரம ராஜசிங்கன் ii. விஜயன் iii. இராஜ ராஜசோழன் iv. விமலதர்ம சூரியன்

04. சாலமோன் அரசனுக்கு இறைவன் விரும்பி மிகுதியாக அளித்த வரம் எது?
    i. ஞானமும், பகுத்தறிவும் iii. ஞானம், செல்வம்
    iii. செல்வமும், புகழும், பகுத்தறிவும் iv. பகுத்தறிவும், வழி மரபினரும்

05. ஆண்டவரே உமது சொற்படியே உன் அடியான் என்னை இப்போது அமைதியுடன் போக செய்கின்றீர் என பெருமிதத்துடன் கூறியவர்
    i. சிமியோன் ii. செகரியா iii. மரியா iv. யோசேப்பு

06. ஆழ்நிலை தியானத்தின் முதற்படி என்ன?
    i. மனதை ஒருநிலைப்படுத்தல் ii. தியானம்
    iii. இறை வார்த்தை வாசித்தல் iv. வாய்மொழி இறை வேண்டல்

07. ஆசிப்பா ஆரம்பமான காலப்பகுதி
    i. கி.பி 1999 ii. கி.மு 1990 iii. கி.பி 1990 iv. கி.மு 700

08. கார்மேல் மலையில் எலியா செய்த எரிபலி முடிவுக்கு வந்தபோது நிகழ்ந்த சம்பவம் யாது?
    i. வறட்சி நீங்கி மழை பெய்தது ii. கடும் வறட்சி ஏற்பட்டது
    iii. இருள் சூழ்ந்தது iv. கடுங்காற்று வீசியது

09. இறைவாக்கினர் நாத்தான் தாவீது அரசனின் தவறைச் சுட்டிக்காட்ட பயன்படுத்தியது,
    i. புதுமை ii. உரையாடல் iii. உவமை iv. படக்காட்சி

10. கடவுள் மீது நம்பிக்கை கொண்டோர் சீயோன் மலை மேல் நிலைத்திருப்பர் என்பதில் சீயோன் என்பது,
    i. நாசரேத்து ii. கலிலேயா iii. எருசலேம் iv. பலஸ்தீனா

- 11 தொடக்கம் 15 வகையான வினாக்களுக்கு மிகப் பொருத்தமான விடையினை தெரிவு செய்து இடைவெளி நிரப்புக.

11. மக்கள் காணுமாறு நீர் ஏற்பாடு செய்துள்ள உமது மீட்பை என் .................................. கண்டு கொண்டன.

12. கேளுங்கள் உங்களுக்கு. கொடுக்கபடும் தேடுங்கள் .................................... தட்டுங்கள் உங்களுக்கு திறக்கப்படும்.

13. இறைவனுக்கு சொந்தமான உயிரை தம் வசப்படுத்திக் கொள்வது .................................. பாவமாகும்.

14. நோயில் பூசுதலின் மூலம் முழு திருச்சபையின் நன்மைக்காகவும் நோயாளியை இயேசு கிறிஸ்துவின் ..................................... ஒன்றிணைக்கலாம்

15. தியானம் என்பது ..................................... ஆகும்.

- 16 தொடக்கம் 20 வகையான வினாக்களுக்கு சரியாய் (✓) எனவும் பிழையாய் (×) எனவும் அடையாளம் இடுக.

16. மனம் வருந்தும் பாவிகள் மட்டில் இறைவன் மகிழ்ச்சி அடைகின்றார். ( )

17. விண்ணை நோக்கி கூக்குரலிடும் பாவங்களில் கொலை செய்தலும் ஒன்றாகும். ( )

18. சவுல் அரசனை தாவீது அரசன் திருப்பொலிவு செய்தார். ( )

19. புதிய படைப்பின் ஆரம்ப கர்த்தா நோவா ஆவார். ( )

20. திருப்பாடல் நூலின் ஆசிரியர் தூய மத்தேயு ஆவார். ( )

## பகுதி **II**

முதலாம் வினா உட்பட மேலும் 4 வினாக்களுக்கும் மொத்தமாக 5 வினாக்களுக்கு விடை எழுதுக.

01. 1. பழைய ஏற்பாட்டின் வெளிப்பாட்டு இலக்கியம் எது? (1 புள்ளி)
2. திருப்பாடல் பாடப்படும் சந்தர்ப்பங்கள் இரண்டு தருக. (1 புள்ளி)
3. நோவாவின் பிள்ளைகளை குறிப்பிடுக. (1 புள்ளி)
4. தாவீது அரசனிடத்தில் காணப்பட்ட நற்பண்புகள் இரண்டு தருக எழுதுக. (1 புள்ளி)
5. தூய வாழ்வின் முன்மாதிரியாக வாழ்ந்த இருவரை குறிப்பிடுக. (1 புள்ளி)
6. "உனக்கு என்ன வரம் வேண்டும்" என யாரால் யாருக்கு கூறப்பட்டது? (1 புள்ளி)
7. இறைவனிடம் அருள் மிகப் பெற்றவர்கள் மகிழ்ச்சியினால் இறைவனை புகழ்ந்து பாடிய புகழ் பாக்கள் இரண்டினை எழுதுக. (1 புள்ளி)
8. தியானம் எனப்படும் தேடலின் போது கவனம் செலுத்த வேண்டிய இரண்டு விடயங்களும் எவை? (1 புள்ளி)
9. தூய அசிசியாரின் ஜெபத்தில் உள்ள நற்பண்புகள் இரண்டு எழுதுக? (2 புள்ளிகள்)
10. ஆசிப்பா அணுகு முறை வேறு எப்பெயர் கொண்டு அழைக்கப்படும் என்பதை எழுதுக. (2 புள்ளிகள்)

(12 புள்ளிகள்)

02. 1. பழைய ஏற்பாட்டின் ஞான நூல்கள் இரண்டு எழுதுக?
2. புதிய ஏற்பாட்டின் மூன்று பிரிவுகளையும் எழுதுக.
3. தற்காலத்தில் நம்பிக்கையற்று துன்பப்படும் கிறிஸ்தவ மக்களுக்காக உம்மால் செய்யக்கூடிய செயற்பாடுகள் ஐந்து எழுதுக. (12 புள்ளிகள்)

03 1. வெள்ளப்பெருக்கின் நோக்கம் யாது?
2. நோவாவுக்கு இறைவன் அருள் பார்வை கிடைத்ததற்கான காரணங்கள் மூன்று தருக.
3. இன்றைய சமுதாயத்தில் நிலவும் பாவ செயல்களை ஒழிப்பதற் கத்தோலிக்க மாணவராகிய நீர் செய்யக்கூடிய செயல்கள் ஐந்து தருக (12 புள்ளிகள்)

04. 1. நாம் செய்யும் பாவங்களுக்கான தண்டனைகள் எவை?
2. ஒப்புரவு அருள் அடையாளத்தின் படி முறைகளை எழுதுக?
3. நோயாளிகள் மட்டில் உமக்குள்ள கடமைகள் ஐந்து எழுதுக. (12 புள்ளிகள்)

05. 1. தூய மரிய கொறற்றி இறக்கும் முன் தன் தாயிடம் கூறிய வார்த்தை யாது?
2. ஒன்பதாம் கட்டளைக்கு எதிரான பாவங்கள் எவை?
3. நாம் நல்லொழுக்கம் உள்ளவர்களாக வாழ செய்ய வேண்டியவைகள் ஐந்து எழுது. (12 புள்ளிகள்)

06. 1. செபம் என்றால் என்ன?
2. கிறிஸ்தவ செப மரபில் செபத்தை எத்தனை வகையாக பிரிக்கலாம்? அவை எவை?
3. ஆசிப்பாவின் நற்செய்தி பகிர்வின் ஏழு படிமுறைகளையும் எழுதுக. (12 புள்ளிகள்)

07. எவையேனும் இரண்டிற்கு சிறுகுறிப்பு எழுதுக
1. தூய டொமினிக் சாவியோ
2. கொலை செய்யாது இருப்பாயாக
3. காணாமல் போன மகன் உவமை
4. ஆசிப்பா (12 புள்ளிகள்)

(4) WWW.PastPapers.WiKi (3)

Download Term Test Papers, Short Notes From One Place!

(4) WWW.PastPapers.WiKi (4)

Download Term Test Papers, Short Notes From One Place!

සියලු ම හිමිකම් ඇවිරිණි  முழுப் பதிப்புரிமையுடையது  All Rights Reserved

வடமேல் மாகாண கல்வித் திணைக்களம்
Provincial Department of Education - NWP

# மூன்றாம் தவணைப் பரீட்சை - தரம் 09 - 2023 (2024)
# Third Term Test - Grade 09 - 2023 (2024)

## கத்தோலிக்க திருமறை

விடைகள்

### பகுதி - I

1. 2
2. 1
3. 4
4. 3
5. 1
6. 4
7. 3
8. 1
9. 3
10. 3
11. கண்கள்
12. நீங்கள் கண்டடைவீர்கள்
13. சாவான பாவமாகும்
14. திருப்பாடுகளோடு
15. தேடலாகும்
16. ✓
17. ✓
18. ×
19. ✓
20. ×

### பகுதி - II

01.
1. தானியேல்
2. மாலை ஆராதனை போது, திருப்பலியில் பதிலுறை பாடலின் போது
3. சேம், காம், யாப்பேத்து
4. தவறை ஏற்றுக்கொள்ள, பாவத்துக்காக மனம் வருந்துதல்
5. தூய மரிய கொறற்றி, தூய அக்னஸ்
6. யாரால் இறைவனால்
   யாருக்கு சாலமோன் அரசனுக்கு
7. சிமியோன் பாடல், செக்கரியாவின் பாடல்
8. கிறிஸ்தவ வாழ்வின் நோக்கம்
   கிறிஸ்தவ வாழ்வை வாழ வேண்டிய முறை
9. சமாதானம், நம்பிக்கை, மகிழ்ச்சி, அன்பு, மன்னித்தல்
10. அன்பியம் என்று அழைக்கலாம்

02.
1. பழைய ஏற்பாட்டின் ஞான நூல்கள் இரண்டு எழுதுக.
2. புதிய ஏற்பாட்டின் மூன்று பிரிவுகளையும் எழுதுக.
3. தற்காலத்தில் நம்பிக்கை அற்று துன்பப்படும் கிறிஸ்தவ மக்களுக்காக உம்மால் செய்யக்கூடிய செயற்பாடுகள் ஐந்து எழுதுக.

03.
1. மூன்றாம் பக்கம்
2. ஒன்பதாம் பக்கம்
3. பொருத்தமான விடைக்கு புள்ளி வழங்குக

04.
1. நாற்பதாம் பக்கம்
2. 42 ஆம் பக்கம்
3. பொருத்தமான விடைக்கு புள்ளி வழங்குக

05.
1. 73ம் பக்கம்
2. 75ம் பக்கம்
3. பொருத்தமான விடைக்கு புள்ளி வழங்குக.

06.
1. 108ம் பக்கம்
2. பொருத்தமான விடைக்கு புள்ளி வழங்குக.
3. 106ம் பக்கம்

07.
1. 125ம் பக்கம்
2. 125 - 126ம் பக்கம்
3. 130ம் பக்கம்

PAST PAPERS WIKI
(1) WWW.PastPapers.WiKi (1)



Download Term Test Papers, Short Notes From One Place!


LOL.lk
BookStore
විභාග ඉලක්ක
පහසුවෙන් ජයගන්න
ඕනෑම පොතක් ඉක්මනින්
නිවසටම ගෙන්වා ගන්න
| කෙටි සටහන් | පසුගිය ප්‍රශ්න පත්‍ර | වැඩ පොත් | සඟරා | O/L ප්‍රශ්න පත්‍ර
| A/L ප්‍රශ්න පත්‍ර | අනුමාන ප්‍රශ්න පත්‍ර | අතිරේක කියවීම් පොත්
| School Book | ගුරු අත්පොත්
pesuru Prakashana Private Ltd.
Akura Pilot
සමනල දැනුම
සතර
පෙර පාසලේ සිට උසස් පෙළ දක්වා සියළුම ප්‍රශ්න පත්‍ර,
කෙටි සටහන්, වැඩ පොත්, අතිරේක කියවීම් පොත්, සඟරා
සිංහල සහ ඉංග්‍රීසි මාධ්‍යයෙන් ගෙදරටම ගෙන්වා ගැනීමට
www.LOL.lk වෙබ් අඩවිය වෙත යන්න